THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, the 28th March 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Opening of new Elementary Schools.

*S.N.***Q.* 20—SRI S. N. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1959-60-ல் புதிய ஆரம்பப் பள்ளிகள் சர்க்காருடைய அனுமதியின்றி திறக்கக்கூடாதென்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளார்களா ?

(ஆ) 1959-60 ல் வடாற்காடு மாவட்டத்தில் தாலூகா வாரியாக எத்தனை ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்படும் ?

(இ) மேற்கண்ட உத்திரவினால் சில கிராமங்களில் புதிய பள்ளிக்கூடங்கள திறக்கமுடியாதநிலை இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(ஈ) இதைக்குறித்து வடாற்காடு மாவட்டக் கலெக்டரிடமிருந்து கடிதம் வந்ததா ?

(உ) அப்படியானால் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) While issuing general orders in regard to balancing of the budgets of the district boards in February 1959, the Special Officers of District Boards were informed that they should not open new schools or additional classes in existing schools or appoint additional teachers without the previous and specific approval of Government.

(*b*) No decision has yet been taken in the matter.

(*c*) The Government have no information.

(*d*) & (*e*) The Collector of North Arcot addressed the Director of Public Instruction in the matter and on a reference received from the Director of Public Instruction the Government have ordered that the ban imposed by them will not apply to the opening of schools under the Five-Year Plan and Unemployment Relief Scheme, as they are covered by sanction of Government, and that the ban will apply only to new cases not covered by existing sanctions.

SRI S. M. ANNAMALAI : ஸார், வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டு சுமார் எத்தனை பள்ளிகள் திறக்க உத்திரவு பிறப்பித்துள்ளார்கள் ? இந்த உத்தரவினால் சர்க்கார் சாங்ஷன் செய்துள்ள பள்ளிக்கூடங்களையே திறப்பதில் கஷ்டம் இருப்பதால், அதை உடனடியாக கவனித்து சர்க்கார் உத்திரவு பிறப்பிப்பார்களா ?

[28th March 1959

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த ஆண்டு எத்தனை பள்ளிகள் திறந்திருக்கிறார்கள் என்ற தகவல் இல்லை. நான் முன்பே சொன்னது போல ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழும், வேலையில்லாத் திண்டாட்ட நிவாரணத் திட்டத்தின் கீழும் வரக் கூடிய எல்லாப் பள்ளிகளையும் திறக்கலாம் என்று இப்போது உத்திரவு போடப்பட்டுள்ளது.

SRI T. T. DANIEL : Sir, may I know the reason for issuing this order?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is for the balancing of the budgets of the district boards?

SRI K. VINAYAKAM : Sir, is it a fact that similar orders on the opening of new schools in the City of Madras by private agencies was issued, and if so, for what reason? Is such a ban lifted this year at least?

THE HON. SRI C. SUBRAMANIAM : The question of grants to these private aided schools was under consideration, and the matter was referred to a committee. Pending a decision by this committee I do not want to enter into fresh commitments. That is why the opening of new aided schools by private agencies was to be done under specific sanction of the Government.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், எந்தெந்த கிராமங்களிலே பள்ளிக் கூடத்திற்காக கட்டிட வசதி செய்து கொடுக்கிறார்களோ அந்த கிராமங்களில் முதல் சலுகை கொடுத்து பள்ளிகளை ஆரம்பிக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப்பார்த்தால், கிராமங்களில் ஏதோ பள்ளிக்கூடங்களே இல்லாதது போல் சொல்லுகிறார்கள். நான் எனது பட்ஜெட் உரையிலே சொன்ன பிரகாரம் சென்ற ஆண்டிலே 500-க்கு மேற்பட்ட ஜனத்தொகை உள்ள கிராமங்களிலெல்லாம் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு ஜனத்தொகை 300-லிருந்து 500 வரை உள்ள கிராமங்களில் பள்ளிக்கூடங்களைத் திறக்க ஏற்பாடு செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. எங்காவது ஒரு சில கிராமங்கள் பாக்கி இருக்குமே தவிர எல்லா கிராமங்களிலும் அநேகமாக பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டு விடும்.

SRI V. K. KRISHNAMURTHY: தலைவர் அவர்களே, ஒரு மைல் தொலைவிற்குள் இருக்கக்கூடிய இரண்டு கிராமங்களில், ஒவ்வொன்றிலும் 500 மக்களுக்கு மேல் இருந்தாலும் கூட, அந்த இரண்டு கிராமங்களிலும் ஜனத்தொகை அடிப்படையில் பள்ளிகள் திறக்கக்கூடாது என்ற ஒரு சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஜூனியர் இன்ஸ்பெக்டரும், ஸீனியர் இன்ஸ்பெக்டரும், ஜில்லா கல்வி அதிகாரியும், அங்கே பள்ளிக்குச் செல்வதற்கு ஏராளமான குழந்தைகள் இருந்த போதிலும், பள்ளிகளைத் திறக்க அனுமதிக்க முடியாமல் இந்தச் சட்டம் குறுக்கே இருப்பதால், அம்மாதிரி இடங்களில் பள்ளிகளைத் திறக்க சர்க்கார் அனுமதி கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி நான் கல்வி மான்யத்தின் போதும் சொன்னேன். ஓராசிரியர், இரண்டு ஆசிரியர்கள் வைத்து பள்ளிகளை நடத்தினால் நல்ல முறையில் நடக்காது. அதிகமான பிள்ளைகளைச் சேர்க்கக் கூடிய ஜனத்தொகை எங்கு இருக்கிறதோ அங்கு திறக்க வேண்டுமென்ற முறை அனுசரிக்கப்படுகிறது. மைலுக்குள்ளாக இருந்தால்

28th March 1959]

மாணவர்கள் நடந்து போய்ப் படிக்க வசதி இருக்கும். ஆகையால் இரண்டு இடங்களிலும் ஆரம்பிக்க வேண்டியதில்லை என்று உத்திரவு போடப்பட்டுள்ளது. அத்துடன் கல்வி மான்யத்தின் போது நான் சொன்னேன், பீடர் ஸ்கூல்கள் 1 வயது, 2 வயது உள்ள இளம் குழந்தைகள் நடக்காமல் இருக்க அதற்கு வேண்டுமானால் திட்டம்வகுக்கலாம் என்று குறிப்பிட்டேன்.

Sri A. A. RASHEED : May I know, Sir, whether this order applies to the local bodies and municipalities also?

The Hon. Sri C. SUBRAMANIAM : I am not quite aware of it. I do not think it applies to municipalities.

Sri S. M. ANNAMALAI : ஸார், சென்ற டிஸ்டிரிக்ட் போர்டு கூட்டத்தில் சுமார் 56 பள்ளிகள் வட ஆற்காடு மாவட்டத்தில் திறக்கப்படும் என்றும், அங்குள்ள இரண்டு தாலூகாக்களில் மட்டும் ஏறத்தாழ 48 பள்ளிகள் திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டதால், மற்ற தாலூகாக்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதால் எல்லா தாலூகாக்களிலும் சரிவர பள்ளிகளைத் திறக்க அரசாங்கம் உத்திரவு போடுவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதைப் பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

Community Development Block in Coimbatore District

* 1028 *Q*—Sri P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கோயம்பத்தூர் ஜில்லாவிலிருக்கும், ஒவ்வொரு சமுதாய நலத்திட்ட ப்ளாக்குக்கும் (Community Development Blocks) 1958–59-ம் வருஷத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையிலிருந்து என்னென்னகாரியங்களுக்காக எவ்வளவு தொகை 1958-ம் வருஷக் கடைசி வரைக்கும் செலவிடப்பட்டன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : Expenditure details are readily available only up to November 1958 in respect of two Community Development Blocks and October 1958 in the case of the third block. These details are given in the statement[a] placed on the table of the House.

Sri P. G. MANICKAM : ஸார், மேற்கண்ட மூன்று சமுதாய நலத்திட்டப் பிரதேசங்களிலும் ரூரல் ஆர்ட்ஸ், கிராப்ட்ஸ் அண்டு இண்டஸ்ட்ரீஸ் என்ற தலைப்பின் கீழ் கடன் கொடுப்பதற்காக தொகை ஒதுக்கப்படவில்லை எனத் தெரிகிறது. அதை உடனடியாக கவனித்து போதுமான தொகையை அதற்கு ஒதுக்குவதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி கேள்வி கேட்பதை விட, அவசியமானால் அங்கத்தினர்கள் எழுதினால் அதைப்பற்றி சுலபமாக கவனிக்க முடியும்.

Mr. SPEAKER : கனம் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் பதிலளிக்க வேண்டிய கேள்விகளையும், கனம் அமைச்சர் லூர்தம்மாள் ஸைமன் அவர்கள் பதிலளிக்கவேண்டிய கேள்விகளையும் நான் பிற்பாடு எடுத்துக் கொள்கிறேன்.

---

[a] Printed as Appendix I on pages 810–813 infra.